பாதுகாவலன்

PATHUKAVALAN

மலர்: 119
இதழ்: 01

15-01-1993
விலை ரூபா 3-50


# "குடா நாட்டில் சிறைப்பட்டோர்"

நாட்டில் நடந்துகொண்டிருக்கும் யுத்தத்தினால் யாழ். குடாநாட்டு மக்கள் அனுபவிக்கும் சொல்லொணாத் துன்பங்களை யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் சிறீலங்கா அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்ததைப் பெரிதும் பாராட்டி, "குடா நாட்டில் சிறைப்பட்டோர்" (Prisoners of the Peninsula) என்னும் தலையங்கத்தின் கீழ் ஆங்கில இதழான "ஐலன்ட்" பத்திரிகை ஆசிரியர் கடந்த சனிக்கிழமை 9.1.93இல் பிரசுரிக்கப்பட்ட இதழில் தன் கருத்தை வழங்கியிருக்கிறார். கிளாலிக் கடலில் நடந்த படுகொலைக்கு முன், யாழ் ஆயர் ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜரில், மக்களின் போக்குவரத்திற்கு பூநகரிப்பாதையைத் திறந்து விடும் கோரிக்கையையும் விடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

* கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண் *


மாநகராட்சி மன்று
20-1-1993
யாழ்ப்பாணம்


### தலைவர் பிரபாகரனுடன் சந்திப்பு

# நாட்டின் சமாதானத்திற்கான ஆயர்களின் முயற்சி

**யாழ். குடாநாட்டிற்கு வருகைதந்த அங்கிலிக்கன் சபை புதிய ஆயர் கெனற் பெர்னான்டோ ஆண்டகையுடன் யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையும் தென்னிந்திய திருச்சபை ஆயர் டி. ஜே. அம்பலவாணர் ஆண்டகையும் கடந்த ஞாயிறு 11-1-93 அன்று நாட்டில் சமாதானத்தை வழிகோலும் முயற்சியாக தலைவர் பிரபாகரனுடன் முக்கிய கலந்துரையாடலை மேற்கொண்டனர். அமைதியை எதிர் நோக்கி வாழும் துன்புறும் மக்களுக்கு இச்சந்திப்பு நம்பிக்கை ஊட்டும் நிகழ்வாக இருந்தது.**

ஆயர்கள் தங்கள் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்து முகமாக முதலில் கத்தோலிக்க யாழ் ஆயர் இல்லத்தில் ஒன்று கூடினார்கள். அதன்பின் முன் கூட்டியே ஒழுங்கு செய்த இடத்தில் தலைவருடன் மூவரும் குழுவாகவும், அதைத் தொடர்ந்து தனித் தனியாகவும் உரையாடினர்.


கத்தோலிக்க திருச்சபை சார்பில் ஆயருடன் குருமுதல்வர் அருட்தந்தை S. J. இம்மானுவேல் அடிகளார் இவ்வுரையாடல்களில் கலந்து கொண்டார்.

மக்கள் அனுபவிக்கும் பல்வேறு சொல்லொணாத் துன்பங்களை மனதில் கொண்டு அவர்களின் துயர் துடைக்கும் நோக்கத்துடன் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றதாக அறிய வருகிறது.

தலைவர் பிரபாகரன் ஆயர்களைப் பெரிமிதத்துடன் வரவேற்று மனம் திறந்து பேசியதாகவும் பல்வேறு விடயங்களைப் பற்றி ஆயர்கள் வினவிய போது அவர் அளித்த விடைகள் அவரின் மதிநுட்பத் திறனையும் சமாதானத்தை உருவாக்க அவர் கொண்டுள்ள ஆர்வத்தையும் வெளிப்படுத்தியது எனவும் மேலும் தெரிய வருகிறது.

கடலோரத்தைச் சார்ந்த பங்குகளிலுள்ள பல்லாயிரக் கணக்கான மக்கள் இடம் பெயர்ந்து படும் இன்னல்களை எடுத்துரைத்த யாழ் ஆயர் தாம் அண்மையில் கொழும்புக்கு சென்ற பொழுது அல்லலுறும் மக்களின் துயர் துடைப்புக்கு மேற்கொண்ட முயற்சிகளையும், குறிப்பாக பூநகரியூடாக மக்கள். போக்குவரத்து செய்வதற்கு தாம் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தைப் பற்றியும் விளக்கினார்.

## காலி மறைவட்டத்தின் புதிய துணை ஆயர்



காலி மறைவட்டத்தின் புதிய துணை ஆயராக அருட்திரு. எல்மோ பெரேரா அடிகளார் திருத்தந்தை 2 ஆம் அருள் சின்னப்பரால் நியமிக்கப்பட்டுள்ளாரென கடந்த மாதம் 24 ஆம்திகதி பிரகடனப்படுத்தப்பட்டது.

இம்மாதம் 6ஆம் திகதி புதனன்று ரோம் நகரில் புனித இராயப்பர் வத்திக்கான் பேராலயத்தில், உலகின் பல பகுதிகளைச் சார்ந்த மற்றும் 10பேர்உட்பட இருவரும் திருத்தந்தையால் ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டார்.

1932, டிசம்பர் 4 ஆம் திகதி சிலாப மறைவட்டத்திலுள்ள மாதம்பையில் பிறந்த இவர், 1960 ஆம் ஆண்டு காலி மறைவட்ட குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். பல்வேறு பங்குகளில் பணியாற்றிய இவர், மறைபோதக சபைகளின் மறைவட்ட இயக்குநராகவும், அண்மையில் மறைவட்ட சமயத்துறை நடுவராகவும் (Chancellor) கடமையாற்றினார்.

புதிய துணை ஆயர் பேரருட்திரு. எல்மோ பெரேரா ஆண்டகை அவர்கட்கு 'காவலன்' நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை பெரிமிதத்துடன் தெரிவிக்கின்றது.

### அருங்கொடை செபக்குழுவின்


## 15வது ஆண்டு நிறைவு விழா

ஊர்காவற்துறை அருங்கொடைப் புதுப்பித்தல் செபக்குழுவின் 15 ஆவது ஆண்டு நிறைவு விழா 18 – 12 – 1992 வெள்ளிக்கிழமையன்று யாழ் மறைக்கல்வி நடுநிலையத்தில் அருட்தந்தை P. இருதயதாஸ் தலைமையில் நடந்தேறியது. 300க்கு மேற்பட்ட உறுப்பினர் ஒரே உள்ளத்தோடு உற்சாகமாய் இறைவனுக்குப் புகழ் பாடி துதி செலுத்தினர்.

விழாவின் நோக்கை திரு. கிஇஸ்ரனிஸ்லோஸ் வழங்கிய முன்னுரையில் எடுத்துக் கூறினார். தொடர்ந்து உரையாற்றிய அருட்திரு எஸ் எச்: ஜெபநேசன் அடிகளார் அருங்கொடைவாழ்வு திருச்சபையின் ஆரம்ப காலத்திலேயே வாழப்பட்டது என்றும், உலக மாயைகளில் மனிதர் சிக்கிய தால் அருகிப்போன இவ்வாழ்வு மீண்டும் பரிசுத்த ஆவியினால் புதுப்பிக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார். முன்னாள் குருமுதல்வர் எஸ். ஏ. மைக்கல்சாமி (O.M.I.)


(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)


## அருட்திரு ஒம்லோ அடிகள் தமது தாயகத்தில் காலமானார்



அருட்தந்தை கிறிஸ்ரியன் ஒம்லோ (அ. ம. தி) அடிகள் தமது தாயகத்தில் காலமானார். இவர் ஹோலந்து தேசத்தைப்பிறப்பிடமாகக்கொண்டவர். 1921ஆம் ஆண்டு பிறந்த இவர் 1946இல் ஒரு அமலமரித்தியாக சபைக் குருவாகத் திருநிலைப் படுத்தப்பட்டார். 1947 இல் ஒரு மிசனறியாக யாழ். மறை மாவட்டப் பணிக்களத்தில் காலடி எடுத்து வைத்தவர் கடந்த 44 வருடங்களாக பேசாலை, தலைமன்னார், நாரந்தனை போன்ற இடங்களில் உதவிப் பங்குத் தந்தையாகவும், அநுராதபுரம் புனித யோசவ், மன்னார் புனித சவேரியார் கல்லூரிகளில் நிதிப் பொறுப்பாளராகவும், வவுனியா, விடத்தல்தீவு, செட்டிகுளம், அடம்பன், புதுக்குடியிருப்பு, அரிப்பு, பள்ளிமுனை, முல்லைத்தீவு, மாங்குளம், பரந்தன் போன்ற பல்வேறு பங்குத்தளங்களில் பங்குத்தந்தையாகவும் கடமைபுரிந்தவர்.


(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)


## திருப்பாலத்துவசபை வழிகாட்டிகள் கருத்தரங்கு

யாழ் மறைவட்ட திருப்பாலத்துவ சபையின் வழிகாட்டிகளுக்கென ஜனவரி மாதம் 8,9,10 ஆம் திகதிகளில் யாழ். மறைக்கல்வி நிலையத்தில் நடந்த கருத்தரங்கில் பல பங்குகளிலிருந்து 64 பேர் பங்கு பற்றினர்.

அருட் சகோதரி கிறிஸ்ரபெல், அருட்தந்தை மைக்கல் சவுந்தரநாயகம், குருமுதல்வர் வண S.J. இம்மானுவேல், மறையாசிரியர் திரு பங்கிராஸ், மறைவட்ட இயக்குநர் முதலானோர் கருத்துரைகள் வழங்கினர். ஞாயிறு காலை யாழ். ஆயர் அவர்கள் ஒப்புக்கொடுத்த திருப்பலி வேளையில் புதிய வழிகாட்டிகள் தங்கள் அர்ப்பண வாக்குறுதிகளை நிறைவேற்றினர்.

## குருக்கள் துறவியருக்கான 'ஒளிவிழா'

புனித சவேரியார் உயர் குருமட அதிபர், குரு மாணவர்களால் முதன் முறையாக ஒழுங்கு செய்யப்பெற்ற குருக்கள் துறவியருக்கான "ஒளிவிழா" கடந்த மாதம் 18 ஆம் திகதி அக்குருமடத்தில் இடம் பெற்றது. நத்தார் சிறப்புச்செய்தி வழங்கிய முன்னாள் குருமுதல்வர் அருட்திரு S.A. மைக்கல் சாமி. O.M.I. அடிகளார் கருத்துச் செறிவுள்ள, அனுபவ வாயிலாகப் பெற்ற, தற்கால சூழ் நிலைக்கேற்ற அரிய ஓர் செய்தியை விடுத்தார். முன்னாள் ஆயர் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை ஆசீர் வழங்கினார்.

## யாழ் மறைவட்ட குரு. பேரவை புனரமைப்பு

புதிய 25 உறுப்பினர்கள் அடங்கிய யாழ். மறைவட்ட குருக்களின்பேரவை (Council of Priests) யின் முதலாவது அமர்வு 12.1.93 செவ்வாய் அன்று யாழ். ஆயர் பேரருட்திரு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் தலைமையில் ஆயர் இல்லத்தில் நடந்தேறியது. இதில் நால்வர் உத்தியோக பூர்வ உறுப்பினரும், 13 பேர் சகல மறைவட்ட குருக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்களும், மற்றும் 8 பேர் ஆயரால் நியமனம் பெற்றவர்களுமாவர். அருட்திரு. A. I. பேனாட் அடிகளார் பேரவையின் செயலராகவும், மைக்கல் சவுந்தரநாயகம் அடிகளார் உதவி செயலராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## புதிய இயக்குனர் நியமனம்

கடந்த ஞாயிறு அன்று நடந்த திருப்பாலத்துவ சபையின் பொதுக்கூட்டத்தில், அருட்திரு றெஜி இராஜேஸ்வரன் அடிகளார் திருத்தந்தையின் மறைபரப்பு சபைகளின்


(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

## எம்கருத்து

# உள்ளம் பொங்குக

தமிழ் மக்கள் பொங்கல் விழாவை நன்றி விழாவாகக் கொண்டாடுகின்றனர். நிலத்தின் விளைவைக் காத்துக் கனியவைத்த இறைவனுக்கு நன்றி நவில்கின்றனர்.

நன்றி விழாவென்றால் நன்மைகளுக்கு மட்டும் தான் நன்றி கூறவேண்டுமா! பெற்ற கொடைகளுக்கு மட்டும் நன்றி கூறுவதில் உள்ள பெருமை என்ன? கொடுப்பதற்கு நன்றி கூறுவது கடன் அன்றோ! பயன் கருதாது செய்வது தானே புண்ணியம்.

ஆம்! நன்மைகளுக்கு மட்டுமல்ல ... நடந்தவை அனைத்திற்கும் நன்றிகூறும் உள்ளம்தான் பண்பட்ட நிலம் ... அந்நிலத்தில் விளையும் நன்றிக்கனி தான் உள்ளப் பொங்கல்.

எதையும் வரவேற்றுத் தாங்கி வரமாகக் கொள்ளும் உள்ளத்தில் தான் பண்பட்ட நற்கனிகள் விளைய முடியும் ... நிகழ்வது எல்லாவற்றிலும் நன்மையைக் கண்டு கொள்ளக் கூடிய நல்ல உள்ளமே எல்லோருக்கும் நல்லாய் இனிய கனிதரும் விருட்சமாக வளரும்,

ஆம்! எதிலும், எப்பொழுதும் இறைவனைக் காணும் இதயம் நன்றி இசைப்பது இயற்கையன்றோ! ''எல்லாவற்றிலும் நன்றி கூறுங்கள்'' என்று புனித சின்னப்பர் கூறுகிறார்.

ஆனால், இன்பவெள்ளத்தில் மூழ்கியிருக்கும் பொழுது எல்லா வரங்களுக்கும் ஊற்றாகிய இறைவனை மறந்து வாழும் உள்ளங்களும் உண்டு. இன்னும் ஒரு சிலர் இன்னல் இடர்களைச் சந்திக்கும் வேளையில் தான் தங்கள் மனதை இறைவன்பால் திருப்புகின்றனர். அதுவும் நன்றியுள்ளத்துடனல்ல; மாறாக புண்பட்ட மனத்துடன், முணுமுணுத்தலுடன்......

இன்பத்தில் மட்டுமா இறைவன் நல்லவர்! ...துன்பத்திலும் இறைவன் நல்லவரே!! ... என்று ஏற்றுக்கொள்ளும் உள்ளம் தான் இறைவனை மனிதக் கண் கொண்டு பார்க்காது மறைபொருள் நோக்கில் நிறைந்து வாழ முடியும்.

உள்ளத்தில் உரமிட்டு, இனிய கனிகளை விளைவிப்பதற்கு அரிய வாய்ப்பு வாழ்விலே நிகழும் எதிர் பாராத இன்னல்கள், துன்பங்களிலும் நன்றி கூறும் போது தூய அன்பு வெளிப்படுகிறது. நம்வாழ்வில் இடையூறுகள் விளையும் போது இறை பராமரிப்பில் நம்பிக்கை ஒளி பிறக்கவேண்டும்.

நிகழ்வதற்கெல்லாம் நன்றி கூறும் நல்ல உள்ளத்திலே வாழ்க்கையை முழுமையாய் ஏற்று மகிழும் சக்தி பிறக்கிறது. உயர்வு தாழ்வெல்லாம் உள்ளத்தில் உறைகிறது என்ற உன்னத எண்ணம் உதிக்கிறது. சிரிப்பிலும் அழுகையிலும் வாழ்வுத்துடிப்பை உணர்ந்து அனுபவிக்கும் பக்குவம் அரும்புகிறது. வாழ்வெல்லாம் வாழ்வதற்கே என்ற உயிர்நாடி துடிக்கிறது. வாழ்வில் விளைவதெல்லாம் வளர்ச்சிக்கு வாய்ப்புக்கள் எனக் கண்டு உள்ளம் மகிழ்கிறது.

ஆம்! வாழ்வில் எல்லாம் நமக்கு உண்டு. எல்லாம் ஏற்பதுதான் முழுவாழ்வு... இத்தகைய ஏற்புடைய மனதிலே வாழ்வு நிறைவடைகிறது... உள்ளம் பொங்கி பொலிவடைகிறது......

எனவே, நிலங்களில் மட்டும் நற்கனி விளைந்தால் போதாது... மனங்களிலும் விளைய வேண்டும். நெற்கதிர்கள் களங்களை நிறைத்தால்போதாது...நெஞ்சங்களும் நற்பண்பின் நற்கனிகளை வழங்கவேண்டும். விளைவின் நற்பயன் பானையில் மட்டும் பொங்கினால் போதாது... பண்புள்ளங்களிலும் பொங்கி வழிந்து பிறர் உள்ளங்களை வளப்படுத்தவேண்டும்.

ஆம்! நன்றி கூறுவோம்... நன்மைகள் அனைத்திற்கும் நன்றி கூறுவோம்... நடந்தது... நடப்பது அனைத்திற்கும் நன்றி கூறுவோம்.

# புரியாத புதிர்களா?

அதிகாரம் 4

## பழைய ஏற்பாடு

**அடுத்த இதழில்**
அதிகாரம் 5

பழைய ஏற்பாட்டில் மீட்பு வரலாறு

14. அன்புமிகு இறைவன் மக்கள்குல முழுமையின் நிறைவாழ்வை அக்கறையுடன் கருத்தில் கொண்டு அதற்காகத் தயாரித்துத் தமது வாக்குறுதிகளை ஒப்படைக்கும் பொருட்டுத் தனித்தன்மை வாய்ந்த திட்டத்தால் ஓர் இனத்தவரைத் தமக்கெனத் தேர்ந்து கொண்டார். ஆபிரகாமுடனும்(காண் ஆதி. 15:18) மோயீசன் வழியாக இஸ்ராயேல் மக்களுடனும் (காண் யாத் 24:8) ஓர் உடன்படிக்கை செய்து தமக்கென ஓர் மக்கட் குலத்தைப் பெற்றுக்கொண்டு அம்மக்கட்கு சொற்கள், செயல்கள் வழியே உயிருள்ள ஒரே உண்மைக் கடவுள் தாமே என்பதை வெளிப்படுத்தினார். இதனால் இஸ்ராயேல் மக்கள், இறைவன் மக்களுடன் தொடர்பு கொள்ளும் வழிமுறைகளை அனுபவித்தறிந்தனர். தம் இறைவாக்கினர் வழியே அவர் தம்மிடம் பேச இவர்கள் அவ்வழிமுறைகளை மேன்மேலும் தெளிவாக ஆழ்ந்தறிந்து அவற்றைப் புற இனத்தாருக்கும் பரவலாக எடுத்துக் காட்டினர் (காண். சங். 21: 28–29; 95:1–3; இசை 2:1–4; எரே. 3:17). திரு ஆசிரியர்கள் முன்னுரைத்து எடுத்துக்கூறி விளக்கம் தந்த நிறைவாழ்வுத் திட்டம் பழைய ஏற்பாட்டின் நூல்களில் இறைவனின் உண்மை வார்த்தையாகக் காணக்கிடக்கின்றது. ஆகவே, இறை ஏவுதலினால் எழுதப் பெற்ற இந்நூல்கள் நிலையான மதிப்புடையனவாக விளங்குகின்றன. ஏனெனில், முற்காலத்தில் எழுதப்பட்ட மறைநூல் வாக்குகள் நமக்குப் போதனையாகவே எழுதப்பட்டன; மறைநூல்கள் தரும் பொறுமையினாலும், ஆறுதலினாலும், நமக்கு நம்பிக்கை உண்டாகவேண்டும் என்பதே அவற்றின் நோக்கம்'' (உரோ 15–4).

பழைய ஏற்பாட்டின் முக்கியத்துவம்

15. யாவருக்கும் மீட்பரான கிறிஸ்துவினுடையவும் மெசியா அரசினுடையவும் வருகையைத் தயார் செய்வதும் முன்னறிவிப்பதும் (காண் லூக். 24:44; அரு. 5 : 39 ; 1 இரா. 1 : 10) பல்வேறு முன்குறிகளால் சுட்டிக்காட்டுவதுமே (காண் 1 கொரி. 10:11) பழைய ஏற்பாட்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது. கிறிஸ்துவால் தொடங்கி வைக்கப்பட்ட நிறைவாழ்வுக் காலத்திற்கு முன்வாழ்ந்த மக்கள் குலத்தின் நிலைக்கேற்ப இறைவனையும் மனிதனையும் பற்றிய அறிவையும், நீதியும் இரக்கமும் நிறைந்த இறைவன் மனிதனுடன் பழகும் முறைகளையும் பழைய ஏற்பாட்டு நூல்கள் அனைவருக்கும் எடுத்துக் காட்டுகின்றன. இந்நூல்கள் நிறைவற்றதும் உலகைச் சார்ந்ததுமான காரியங்களையும் கொண்டிருந்தாலும்கூட, இறைவனின் உண்மையான போதனை முறையைக் காட்டுகின்றன. மேலும், இந்த நூல்கள் கடவுளைப்பற்றிய உயிருள்ள உணர்வை நமக்குத் தெரிவிக்கின்றன. அவரைப் பற்றிய நிறைவாழ்வின் ஞானத்தையும் செபத்தின் வியத்தகு களஞ்சியத்தையும் தம்மகத்தே தாங்கியுள்ளன. இறுதியாக, இவைகளில் நம் நிறைவாழ்வின் மறைத்திட்டம் மறைந்துகிடக்கின்றது. எனவே, கிறிஸ்தவர்கள் அந்நூல்களைப் பக்திப் பற்றுதலுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பழைய, புதிய ஏற்பாடுகளின் ஒற்றுமை

16. இரு ஏற்பாடுகளையும் எழுதுவதற்கு ஏவியவரும், அவற்றின் ஆசிரியருமான இறைவன் புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டில் மறைந்திருக்கவும், புதிய ஏற்பாட்டில் பழைய ஏற்பாடு தோன்றி வெளிப்படவும் ஞானத்துடன் வழிவகுத்தார். கிறிஸ்து தமது குருதியால் புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தினார் காண் லூக். 22 ; 20 :) 1 கொரி 11;25 ). இருப்பினும், பழைய ஏற்பாட்டின் எல்லா நூல்களும் நற்செய்தி அறிவிப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டுப் புதிய ஏற்பாட்டில் தங்கள் முழுப் பொருளையும் பெற்று வெளிப்படுத்துகின்றன. (காண் மத். 5 : 17; லூக். 24 : 27; உரோ. 16:25–26; 2 கொரி. 3:14–16) ; புதிய ஏற்பாட்டை ஒளிர்வித்து விளக்குகின்றன.

## மரபுகளும் மாற்றங்களும்

### 1. பொங்கல் — என். சண்முகலிங்கன்

1·1 எங்கள் பண்பாட்டின் உயிர்ப்பிற்கும், உறுதியான தொடர்ச்சிக்கும் துணையாகும் கொண்டாட்டங்களிலே முக்கியமான இடத்தினைப் பெறுவது தைப்பொங்கல்–

அறுவடை கண்ட மகிழ்ச்சியில், தம் உழைப்பினுக்கு உதவி நின்ற அனைத்தினுக்கும் நன்றி சொல்லும் ஆனந்த விழாவாக பொங்கல் தை முதல் நாளில் ஆண்டுதோறும் கொண்டாடப்படுகின்றது.

இந்நாளில்தான் சூரியனின் வடக்கு நோக்கிய பயணம் ஆரம்பமாகிறது. உத்தராயண ஆரம்பம் எனப்படும் இந்த வேளையில் பொங்கலை சூரியனுக்கு அர்ப்பணமாய் படைத்து வணங்கும் மரபும் இணைந்திருக்கின்றது.

புதிய பானையில், புதிய அரிசி, பொங்கல் பானையில் பால் பொங்கும் போது எல்லோரது உள்ளங்களிலும் மகிழ்ச்சியும் பொங்கும். தைபிறந்தால் வழிபிறக்கும் என்ற நம்பிக்கையும் காலங் காலமாக மக்கள் மனங்களில் உறுதி வளர்ப்பது.

**இன்றைய எங்கள் பொங்கல் நினைவுகள் ...**

பலரது நெஞ்சங்களில் துயரங்களின் பொங்குதலாய் கண்ணீரையே வழியச் செய்யும்.

காலங்காலமாக பொங்கிய முற்றங்களை இழந்துபோன மக்களும், கடந்த காலங்களில் கூட இருந்து பொங்கிய உறவுகளைப் பறிகொடுத்த மக்களும், உயிர்வாழ்வின் ஆதாரமான உழைப்புக்களங்களான உற்பத்தி நிலங்களை எட்டமுடியாத மக்களும் என இங்கு பொங்குகின்ற மனங்கள் பெருகும்–


இருந்தாலும்

இவர்கள் நம்பிக்கையும், மரபினை பேணும் மன வலிமையும் தணிந்ததில்லை. அகதிமுகாம்களிலும் பொங்குதல் நடக்கும் —

நாளை நம் முற்றங்களில் பொங்கல் பொழுதைக் காண்போம் என்ற நினைவுகளில் இன்றைய துயரங்களை கரைத்து இந்த பொழுதிலேனும் வாழுதல் நிகழும் —

பண்பாட்டு பண்டிகைமரபுகளின் வலிமையே இதுதான்—

1·2 பொங்கலைத் தொடரும் அடுத்தநாள் - மாட்டுப் பொங்கல் நவீன வளர்ச்சியில் முக்கியத்துவத்தை இழந்து வெறும் சடங்காக மட்டும் நடைபெற்ற இந்தப் பொங்கல், இன்றைய காலத்து மீண்டும் முன்னைய அர்த்தத்துடன் தழைப்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும். ஏர் உழவும், சூத்திரக் கிணறும் மீள உயிர்க்கும் களங்களிடை, மனித நாகரிகம் தன் மன கதவுகளை அடைத்துக்கொண்ட வேளையிலே, சலியாது தோள் கொடுக்கும் மாடுகளை — செல்வமெனச் சீராட்டி, இங்கு மாட்டுப்பொங்கல். மனிதப் பொங்கிலைவிட சிறப்பாக கொண்டாடப்படவேண்டும்.



# சமாதானம் வேண்டுமென்றால் ஏழைகளுக்குக் கரம் நீட்டுங்கள்

*திருத்தந்தை 2-ம் அருள் சின்னப்பரின் சமாதான தினச் செய்தி (தமிழாக்கம்: செல்வி. வயலற் இம்மனுவேல்)*

நல்லெண்ணமுள்ள எவர்தான் சமாதானத்திற்காக ஏங்குவதில்லை? இன்று சமாதானம் அதியுயர்ந்ததோர் மதிப்பீடு என்றும், பேணிப்பாதுகாக்க வேண்டிய ஒன்றென்றும் அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆயினும் முரண்பட்ட அரசியற் கோட்பாடுகளையுடைய வல்லரசுகளிடையே பயங்கர யுத்தம் ஏற்படும் சாத்தியக்கூறுகள் படிப்படியாகக் குறைந்துவிட்ட போதிலும், உலகின் பல பாகங்கள் கடுமையான உள் நாட்டுப்போர்களில் மூழ்கிக் கிடக்கின்றன. இதனால் நாள்தோறும் அநேகர், குறிப்பாக அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுவதோடு, பேரழிவுகளும் ஏற்பட்டுள்ளன. யுத்த நிறுத்தத்திற்காக பிறநாடுகள் எடுத்துக்கொண்ட ஒருமித்த முயற்சியோ, சர்வதேச நிறுவனங்களின் மனிதாபிமானச் செயற்பாடுகளோ, சமாதானம் வேண்டி மக்கள் எழுப்பும் குரல்களோ இந்த அர்த்தமற்ற ஆயுதப் போர்களை நிறுத்துவதாயில்லை.

உலகில் சமாதானத்துக்கு இருக்கும் மற்றொரு பெரும் அச்சுறுத்தலும் உண்டு. இன்று அநேக மக்களும், மக்களினங்களுங்கூட அட்டதரித்திரத்தில் வாழ்ந்து வருவது கண்கூடு. மிகுந்த பொருளாதார வளர்ச்சிபெற்ற நாடுகளிற்தன்னும் செல்வந்தருக்கும் வறியோருக்குமிடையில் உள்ள இடைவெளி விரிந்து கொண்டு வந்துள்ளது. இந்தப் பிரச்சினையை மனுக்குலத்தின் மனச்சாட்சி அலட்சியம் செய்ய முடியாது. ஏனெனில் பெருந்தொகையான மக்கள் வாழ்ந்து வரும் நிலைமையானது அவர்களது உள்ளார்ந்த மகத்துவத்துக்கு ஓர் அவமதிப்பாகும். இதன் விளைவாக உலக சமுதாயத்தின் உண்மையான, ஒருங்கிசைவான முன்னேற்றத்துக்கு ஓர் அச்சுறுத்தலாகும்.

''சமாதானம்'' என்று சொல்வது வெறுமனே போரற்ற ஒரு நிலையல்ல, அதற்கு மேலாக இன்னும் எவ்வளவோ காரியங்களைக் குறிக்கிறது. ஒவ்வொரு மனிதப் பிறவியினதும் தனிப்பட்ட மகத்துவத்துக்கும், உரிமைகளுக்கும் உண்மையான மதிப்பைக் கொடுக்கும், அவன் முழுமையான நிறைவு அடையத் துணைபுரியும் ஓர் நிலைமையை உண்டாக்குவதாகும். பலவீனர்கள் சுரண்டப்படுவதும், வறுமையும் சமூக ஏற்றத் தாழ்வுகளும், இங்குமங்கும் காணப்படுவதும் உண்மையான சமாதானத்திற்கேதுவான நிலைமைகளை ஏற்படுத்துவதற்குத் தடையாக உள்ளன.

**2. இன்று வறுமைக்கு மூல காரணமாயுள்ள மற்றொரு ஏது** நாடுகளுக்கிடையிலும், உள் நாட்டிலும் நிகழ்ந்து கொண்டிருக்கும் போர்களாகும். நான் 1981-ம் ஆண்டு சமாதானச் செய்தியில் கூறியதுபோல் ''சமாதானத்தைப் பேணவேண்டுமென்றால் சுதந்திரத்தை மதிக்கவேண்டும்.''

''நாடுகளினதும், மக்களினங்களினதும் சுதந்திரத்தை மதிப்பது சமாதானத்திற்கு இன்றியமையாததோர் அம்சமாகும்.'' ஒரு மக்களினத்தினதோ, நாட்டினதோ இறைமை மதிக்கப்படாததால் தொடர்ந்து யுத்தங்கள் மூண்டு மக்களினங்களும், முழுக் கலாச்சாரங்களுமே அழிவுற்றிருக்கின்றன.

**3. போராட்டத்தின் ஒரு தோற்றுவாய் வறுமை**

வறுமையின் அடிக்கோட்டில் வாழும் மக்களின் தொகையோ பெரிது. உதாரணமாக ஆபிரிக்கா, ஆசியா, லத்தீன் அமெரிக்காவிலுள்ள சில நாடுகளில் பெருந்தொகையான சனங்களும், சனத்தொகையின் முழுக்கூறுகளுமே குடிமை வாழ்விலிருந்து ஒதுக்கப்பட்டுள்ளன. அங்குள்ள பெருந்தொகையான குழந்தைகள் தாம் உயிர்வாழ வேண்டுமானால் தம்மைத் தவிர வேறொருவரையும்நம்பியிருக்க முடியாத நிலை. இத்தகைய ஒரு நிலை, மனித மகத்துவத்துக்கு ஓர் அவமதிப்பு மட்டுமல்ல, சமாதானத்துக்கு ஓர் அச்சுறுத்தலும் ஆகுமென்பது தெளிவு. ஓர் அரசு, அது எத்தகைய அரசியல் பொருளாதார அமைப்பைக் கொண்டிருந்தபோதிலும், தனது நாட்டிலுள்ள மிகப் பலவீனமான மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தவறுமாயின் அது நிலையற்றதாகவும், வலுவற்றதாகவும் ஆகிவிடும்.

தமது தனிப்பட்ட அல்லது குடும்ப தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன், தமது சமுதாயத்தின் வாழ்விலும் முன்னேற்றத்திலும் பங்குகொள்ளக்கூடிய தான நிலையில் வாழும் உரிமை சகல மக்களுக்கும், சமூகக் குழுக்களுக்கும் உண்டு. இந்த உரிமை அங்கீகரிக்கப்படாதவிடத்து தம்மை ஏற்றுக்கொள்ளாத ஓர் அமைப்பிற்குத் தாம் பலியாவதாக அவர்கள் கருதி, கடும் எதிர்ப்பைக் காட்டுகின்றனர். குறிப்பாக இளைஞர்களைப் பொறுத்தமட்டில் போதிய கல்வியறிவோ, வேலை வாய்ப்புகளோ கிடைக்காத காரணத்தால் ஒதுக்கப்பட்டு, சுரண்டப்பட்டு வாழும் ஆபத்துக்கு இவர்கள் பெரிதும் உள்ளாகின்றனர் குறிப்பாக இளைஞர் மத்தியில் நிலவும் வேலையில்லாத் திண்டாட்டம் என்னும் பிரச்சினையால் அதிக மதிகமான தனிநபர்களும் குடும்பங்களும் வறுமைநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமையை அனைவரும் அறிவர். மேலும், பெரும்பாலும் இவ்வேலையின்மை உள்நாட்டு, வெளிநாட்டுப் போர்களினால் நாட்டின் பொருளாதார அமைப்புகள் நாசமடைந்ததன் விளைவேயாகும்.

இவ்வேளையில், ஏழைகளை நெருக்கி, அதனாலேயே சமாதானத்துக்கு அச்சுறுத்தலாயிருக்கும் சில பிரச்சினைகளைக் குறிப்பிட விரும்புகிறேன்.

முதலாவது, அந்நியக் கடன் என்னும் பிரச்சினை. சில நாடுகளில் இதனாற் பாதிக்கப்படுபவர்கள் ஏழைமக்களே. இத்தகைய அநீதியான நிலைமை விரக்திக்கும், மனக்கசப்புக்கும் எதிர்ப்புக்கும் வழிவகுக்கும்.

மற்றொரு பாரிய பிரச்சினை போதைப்பொருள்கள். போதைப்பொருள்களுக்கு வன்முறைகள், குற்றச்செயல்களோடுள்ள தொடர்பை அனைவரும் அறிவர். சில நாடுகளில் போதைப்பொருள்களை விற்பனைசெய்வோர் அதனை உற்பத்தி செய்வதற்கு ஏழைமக்களைத் தம் கருவிகளாகப் பயன்படுத்துகின்றனர். அவர்களும் தமது பாரம்பரிய பயிர்ச்செய்கையால் போதிய வருமானம் கிடைக்காதபடியால் இதனைச் செய்ய உந்தப்படுகிறார்கள். இவர்கள் தம் வறுமை நிலையிலிருந்து மீள்வதற்குப் போதிய வழிவகைகளை அளிப்பதே முதல்முதல் செய்யவேண்டிய உதவியாகும்.

சில நாடுகளிலுள்ள பெரும் பொருளாதார நெருக்கடி காரணமாக மற்றொரு பிரச்சினை தோன்றுகிறது. இந்நிலை காரணமாக பெருந்தொகையான மக்கள் செல்வந்த நாடுகளுக்கு இடம்பெயர நேரிடுகிறது. இதன் விளைவாக அந்நாடுகளில் ஏற்படும் பதற்றநிலை சமுதாய ஒழுங்கைக்குலைக்கிறது அந்நியர் மீதுள்ள வெறுப்பினால் ஏற்படும் வன்செயல்களுக்கு முகங்கொடுக்க அவரசகால நடவடிக்கைகள் மட்டும்போதுமானவை அல்ல. பிரச்சினைகளின் மூல காரணங்களைக் கண்டுபிடித்து, புதுவிதமான சர்வதேச கூட்டொருமைப்பாடுகளின் மூலம் இடப்பெயர்ச்சி ஆரம்பித்த நாடுகளின் முன்னேற்றத்துக்கும், அபிவிருத்திக்கும் வழி செய்வது அவசியமாகும்.

ஆகவே, கடும் வறுமை சமாதானத்துக்கு ஓர் மறைமுகமான ஆனால் மெய்யான ஓர் அச்சுறுத்தலாக இருக்கிறது. மனிதமாண்பைச் சீர்குலைப்பதனால் அது வாழ்வின் மதிப்பீட்டையே தாக்குகின்றது; சமுதாயத்தின் அமைதியான வளர்ச்சிக்கு ஊறு செய்கிறது.

(வளரும்)

---

## காவலன் கண்மணிகள்

| ஒளி: 8<br>சுடர்: 01 | எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு |
|---|---|

அன்புக் கண்மணிகாள்!

உங்கள் அனைவருக்கும் குழந்தை யேசுவின் ஆசிகள் உரித்தாகுக.

பூத்திருக்கும் புத்தாண்டு சமாதான மணம் வீசும் நல்லாண்டாக இருக்க மனந்தளராது இறைவனிடம் வேண்டுங்கள்.

அடுத்த சுடர் தொடக்கம் ''ஐம்பது வினாக்கள்'' என்ற போட்டி உங்களுக்காகத் தரவிருக்கிறேன்.

வினாக்கள் தொடராக வரும். பதில்களை அறிவிக்கும் பொழுது அனுப்புங்கள்.

புள்ளி அடிப்படையில் பரிசு வழங்கப்படும்.

அங்கத்தவர், கௌரவ அங்கத்தவரும் இப்போட்டியில் பங்குபெறலாம்.

1ஆம் பரிசு ரூபா 40
2ஆம் பரிசு ரூபா 30
3ஆம் பரிசு ரூபா 20
பரிசுக்கான தகுதிப்புள்ளிகள் 70%

அங்கத்துவம் பெற விரும்பின் பின்வரும் விபரங்களுடன் விண்ணப்புக்கவும்.

பெயர், வயது, கற்கும் ஆண்டு, கல்வி கற்கும் பாடசாலை வீட்டுமுகவரி.


உங்கள் கண்கள் அடுத்த சுடரைக்காண ஆவலுடன் காத்திருக்கும் என்பது உறுதி.

நன்றி

உங்கள் அன்பின்
அன்பு விழி

---

## 10 - ம் வருட நினைவு



ம. சூசைப்பிள்ளை. J. P.
(ஆசிரியர்)

மலர்வு 14-04-1926 உதிர்வு 03-01-1983

''உயிர்ப்பும் உயிரும்நானே. என்னில் விசுவாசம் கொள்பவன் ஒருபோதும் சாகான்''
அரு 11:25

இவரின் பிரிவால் துயருறும் மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

இளவாலை.

A/1/93

---



## பொங்குக இனிதே பொங்கலுமே

ஏர் பிடிப்போர் கைகள் ஓங்கிடவும்
ஏந்தி வாழும் குலம் தாழ்ந்திடவும்
பாரில் மகிழ்ச்சி பொங்கிடவும்.
பொங்குக இனிதே பொங்கலுமே.

உழுதுண்டு வாழ்வோரை உய்வுற்றோர்
உயர்குலம் அவருமே அறிந்திடுவீர்.
பழுதின்றி அவர் வாழ்வு பரிமளிக்க
பொங்குக இனிதே பொங்கலுமே.

ககனம் ஒளிபெறும் கதிரவனின்
களங்க மற்ற கதிர்களைப் போல்
அகமே மகிழ்ந்து அக்களிக்க
பொங்குக இனிதே பொங்கலுமே

— அ. நிக்ஸன் —

# யார் இந்த ஞானிகள்?



நான்கு நற்செய்தியாளர் களில் லூக்கா, மத்தேயு ஆகிய இருவரும் மட்டும்தான் எமக்கு இயேசுவின் பிறப்புப் பற்றிய செய்தியைத் தருகிறார்கள். இவ்விருவரிலும் மத்தேயு மட்டுமே (மத். 2, 1–12) ஞானிகள் இயேசுவை தரிசிக்க வந்ததை விபரிக்கின்றார். மத்தேயுவினால் இந்நிகழ்வு விபரிக்கப்பட்டிருக்கும் முறையானது அவரது இறையியல் நோக்கத்தைத் தெள்ளெனப் புலப்படுத்துவதாய் உள்ளது.

புறவினத்தாரான ஞானிகளும், யூதனான ஏரோதும், யெருசலேமும் எதிரெதிராக வைத்துக் காட்டப்படுகின்றனர். பிறந்திருப்பதோ யூதரின் அரசன்; ஆனால் அதை அறிந்து மகிழ்பவரோ, வணங்க வருபவரோ புறவினத்தார். யூதர்கள் அவர் பிறப்பில் கலங்குகின்றனர். (2: 3) ஆக யூதரின் மெசியாவை யூதர் நிராகரிக்க புறவினத்தார் ஏற்றுக் கொள்கின்றனர் என்ற உண்மையைச் சொல்லி யூதரைச் சாட மத்தேயு இந்நிகழ்வை மிக அழகாக பாவித்துள்ளார்.

ஆசிரியரின் நோக்கம் இவ்வாறிருக்க ஆதியிலிருந்தே இஞ்ஞானிகளைச் சுற்றி சுவையான பாரம்பரியங்கள் உருவாகத் தொடங்கின கல்லறைச் சுரங்கங்களில் காணப்படும் கிறிஸ்மஸ் பற்றிய ஓவியங்களில் இந்தஞானிகள் முக்கியம் பெறுகின்றனர். நற்செய்தியிலே ஞானிகளின் எண்ணிக்கை பற்றி எதுவும் கூறப்படாததனால் சில ஓவியர்கள் பன்னிரு ஞானிகளின் ஊர்வலத்தை சித்திரித்துள்ளனர். ஆயினும் ஞானிகளால் வழங்கப்பட்ட காணிக்கைகள் மூன்று என்றபடியால் ஞானிகளின் எண்ணிக்கையை மூன்று என்று மட்டுப்படுத்திக் கொள்ளும் வழக்கு பிரபல்யம் பெற்றது. ஆரம்பத்தில் இவர்கள் வான சாத்திரிகளாகக் காட்டப்பட்டனர். பின்பு 6-ம் நூற்றாண்டளவில்தான் இவர்களை அரசர்களாகச் சித்திரிக்கும் மரபு தோன்றியது. இக்காலத்திலேதான் இவர்களுடைய பெயர்கள் பால்தசார், மெலிக்கியோர், கஸ்பார் என்று நிர்ணயிக்கப்பட்டது.

இவர்களுடைய வரலாற்றுத் தன்மை தொடர்பாக பல முரண்பாடான, சுவையான மரபுகள் தோன்றியுள்ளன. கி. பி. 54 இலே ஆர்மீனியாவிலே ஏழு கிறிஸ்மஸ் திருப்பலியிலே இவர்கள் மீண்டும் சந்தித்தார்கள் என்றும், சில நாட்களின் பின் இறந்த அவர்களுடைய உடல்கள் மிலானுக்கு எடுத்துச் செல்லப்பட்டு பாதுகாக்கப்பட்டு கொலோன் பேராலயத்திலே இன்றுவரை பேணப்படுகின்றன என்றும் சொல்கிறது ஒரு மரபு. இம்மரபு மூன்று ஞானிகளின் கல்லறையை ஈரானிலே கண்டதாகக் கூறும் மார்க்கோ போலோவின் குறிப்புகளுக்கு முரணாக உள்ளது. இவர்கள் மூவரும் புனித தோமையாரால் இந்தியாவில் ஆயர்களாக அபிசேகம் செய்யப்பட்டார்கள் என்று சொல்கிறது இன்னுமொரு மரபு.

ஞானிகள் பற்றிய மரபுகளை அண்மையிலே ஆராய்ந்து நூல் இயற்றிய மார்க்கோ பூசாலி என்பார் மூன்று ஞானிகளுள் கஸ்பார் பற்றிய மரபுகளில் அதிக வரலாற்றுத் தன்மை இருப்பதாகக் குறிப்பிடுகின்றார். ஆப்கானிஸ்தான் பகுதியில் ஆட்சிசெய்த இவர் இயேசுவைக் காணச் சென்றபோது இளவரசனாக இருந்திருக்க வேண்டுமென்பதும் பின்பு புனித தோமையாரால் மனம்மாற்றப்பட்டார் என்பதும் இவருடைய கருத்து. இதே ஞானியை யாழ்ப்பாணத்தை ஆண்ட ஒரு மன்னனென்றும் பின்பு அவர் இந்தியாவிலே புனித தோமையாரால் கிறிஸ்தவராக்கப்பட்டாரென்றும் ஒரு கருத்தை சுவாமி ஞானப் பிரகாசியார் எமது பகுதி மரபுகளைத் தழுவி முன்வைத்திருக்கிறார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இம் மூன்று ஞானிகளையும் மூன்று பராயத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துபவர்களாக இளைஞராகவும், நடுவயதினராகவும், முதியவராகவும் காட்டும்வழக்கமும், உலகின் மூன்று பெரும் இனங்களின் பிரதிநிதிகளாகக் காட்ட வெவ்வேறு நிறங்களின் சித்திரிக்கும் வழக்கமும் இடைப்பட்டுவந்தமையாகும்.

இவ்வாறு ஞானிகள் இயேசுவை தரிசித்த நிகழ்வைத்தான் திருக்காட்சி விழாவென்று நாங்கள் கொண்டாடுகின்றோம். யூதரல்லாதோருக்கும் இயேசு கிறிஸ்து ஆண்டவர் என்று அறிக்கையிட்டு நிற்கும் இவ்விழாவானது புறவினக் கிறிஸ்தவர்களாகிய எங்களுக்கு உண்மையில் மிகவும் மகிழ்வதற்குரிய ஒரு விழாவாகும். அன்று ஞானிகள் விண்மீனைக் கண்டு தடைகளைத் தாண்டிச்சென்று இயேசுவை தரிசித்தது போல நாங்களும் எமது சொந்த வாழ்விலே ஒரு விசுவாசப் பயணம் மேற்கொள்ளவும், உண்மையில் இயேசுவைக் கண்டடையவும் இவ்விழா துணைசெய்யட்டும்.

சந்திரன்
புனித சவேரியார் குருத்துவக்கல்லூரி.
கொழும்புத்துறை

## புதிய இயக்கு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாழ் மறைவட்ட புதிய இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளாரென்பதை யாழ் ஆயர் தெரிவித்தார். அவருக்கு காவலன் தன் வாழ்த்துதல்களை தெரிவிக்கின்றது.

# அசிசிக்கு அமைதியின் திருப்பயணம்

"மீட்பராகிய இயேசுவின் பிறப்பில் அமைதி கடவுளின் சிறப்புக்கொடையாக அறிவிக்கப்பட்டது. இவ்வுலகில் கடவுளின் தயவுபெற்றவருக்கு அமைதி உண்டாகுக என்று வானோர் பாடியது பேர்மதிப்புற்ற கொடையாகிய அமைதி அதனை ஏற்று அதற்காக உழைக்கவும் நம்மைத் தூண்டுகின்றது'' என்று 2ஆம் அருள் சின்னப்பர் கூறினார்.

இத்தகைய மதிப்பிட முடியாத கொடைக்காக இறைவனை இறைஞ்சவே இம்மாதம் 9-10 திகதிகளில் திருத்தந்தை அசிசிக்கு அமைதியின் திருப்பயணியாகச்சென்றார். மத்திய இத்தாலியிலுள்ள இந்நகர் பணிவான புனித பிரான்சிஸ் அமைதியின் அடையாளமாக நிற்கும் நகருமாகும்.

இங்கு தங்கியிருந்த இவ்விரு நாட்களிலும் திருத்தந்தை மற்றும் பல்வேறு மதத்தலைவர்களுடன் ஒன்றிணைந்து உலகில் அமைதியை நிலைநாட்ட இறைவனின் சிறப்புத் தலையீட்டுக்காக செபித்ததுடன் தியானத்திலும், கலந்துரையாடுதலிலும் ஈடுபட்டார்.

## உள்துறை அமைச்சரவை மீது குற்றச்சாட்டு

நபீபியாவில் அகதிகள் சித்திரவதைப் படுத்தப்படுவதாகவும், அகதிகளை வெளிநாடுகளில் குடியமர்த்த உதவ அரசு மறுத்து வருவதாகவும் அந்நாடுகளின் மனித உரிமைகள் குழு ஒன்று குற்றம்சாட்டியுள்ளது. எவ்வித விசாரணையும் இன்றி அகதிகளைச் சிறை வைத்தல் சட்டவிரோத நாடு கடத்தல் போன்றன நபீபியாவின் உள்துறை அமைச்சரவையில் தொடர்ந்து நடத்தப்பட்டு வருவதாக மனித உரிமைகளுக்கானதேசியக்கழகம் என்றகுழு தன் அறிக்கையில் தெரிவித்துள்ளது. 1990ஆம் ஆண்டு மார்ச் மாதம் கோபுரமடைந்த நபீபியா அண்மை நாடுகளின் அகதிகளுக்கு புகலிடம் கொடுக்க தயங்கிவருவதாக இக் குழுவின் அறிக்கை குற்றம் சாட்டுகின்றது.

## வேதாகமக் குறுக்கெழுத்துப்போட்டி முடிவுகள்

யாழ். மறைக்கல்வி நிலையம் சென்ற வருடம் டிசம்பர் மாதம் நடாத்திய வேதாகமக் குறுக்கெழுத்துப் போட்டியின் முடிவுகள் வெளிவந்துள்ளன, அவை பின்வருமாறு:-

1ஆம் இடம் ஜோண்கபாஸ் கலைச்செல்வி (உரும்பிராய் கிழக்கு உரும்பிராய்)

2ஆம் இடம் இக்னேசியஸ் மரியதாஸ் (மானிப்பாய் தெற்கு மானிப்பாய்)

3ஆம் இடம் கி. மொனிக்கா (கடற்கரை வீதி, பருத்தித்துறை)

இப் போட்டியில் ஊக்கமுடன் பலர் பங்குகொண்டு சரியான விடைகள் அனுப்பியுள்ளார்கள். அவர்களுக்கு பாராட்டுக்களை தெரிவிப்பதுடன், அதிர்ஷ்டசாலிகள் மூவருக்கும் உரிய பரிசில்கள் வழங்கப்படுமென யாழ் மறைக் கல்வி இயக்குநர் R. H. சகாயநாயகம் அடிகளார் தெரிவித்துள்ளார்.

## நாக்சித் தீவிரவாதிகளின் கொலை முயற்சி

பிரேசில் நாட்டில் ஆலயம் ஒன்றில் திருப்பலி நிகழ்த்திக் கொண்டிருந்த வேளையில் எலிகளைக் கொல்லக்கூடிய நஞ்சு கலந்த திருப்பலி இரசத்தை குடித்ததன் காரணமாக குரு ஜேக்கப் உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்று காவற்துறை கூறியது. இவ் இரசத்தைக் குடித்தவுடன் குருவின் வாயிலிருந்து வெண்நுரை வெளியேறியிருந்ததாக கூறும் காவற்துறை இந்நஞ்சைக் கலந்தவர்கள் புதிய நாக்சித் தீவிரவாதக் குழுக்கள் எனச் சந்தேகிக்கப்படுவதாகவும் கூறுகின்றது.

## மனிதாபிமானமற்ற செயல்

இஸ்ரேல் அரசு ஒவ்வொரு மனிதனின் வாழ்வை மதிப்பதை தன் முதல் நோக்கமாகக் கொண்டிருக்கவேண்டும் என்று விண்ணப்பித்தார் இத்தாலியின் பேராயர் கருதினால் ஜோவானி 415 பாலஸ்தீனியர்களை இஸ்ரேலைவிட்டு வெளியேறியிருக்கும் மனிதாபிமானமற்ற முறைபற்றிக் குறிப்பிட்டு இவர்களுக்கு விரைவில் மனிதாபிமான முறையில் உதவிகள் வழங்கப்படவேண்டும் என்று கேட்டுள்ளார் கருதினால் ஜோவானி காதாலினே. 6வீரர்கள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து பாலஸ்தீனியர்கள் நாட்டை லிட்டு வெளியேற்றப் பட்டுள்ளார்கள். இக் கொலை செய்தவர்களைக் கண்டிக்கும் அதேவேளை யூதர், கிறிஸ்தவர் மற்றும் இஸ்லாம் சமூகங்களின் பேரில் இப்பாலஸ்தீனியர்களின் பாதுகாப்பான வாழ்வுக்காக விண்ணப்பிப்பதாகவும் கருதினாலின் அறிக்கை கூறுகின்றது

## அருட்திரு ஓம்லோ...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ நெருக்கடிகள் மிகுந்த இந்த நாட்களில், தனது உடமைகள் அனைத்தையும் இழந்தும், மக்களோடு மக்களாக இணைந்து தமது வாழ்வைப் பகிர்ந்து கொண்டவர்.

1991 இல் சுகவீனம் காரணமாக தமது சொந்த நாடு சென்றவர்.

1992 இல் மார்கழி மாதம் 24ஆம் திகதி இறைபதம் சேர்ந்தார்.

சுகயீனமாக தமது நாட்டிற்குச் சென்றபின். 1971 ஆண்டின் ஆரம்பத்தில் அருட்தந்தை ஓம்லோ ஒரு குருவானவருக்கு பின்வருமாறு எழுதினார்; "எனது உடல்நிலை முன்னேறுவதால், இனிமையான இலங்கைக்கு சீக்கிரம் திரும்பலாம் என நம்புகிறேன். நான் ஏன் இலங்கைக்குத் திரும்ப வேண்டுமென என்னிடம் பலரும் கேட்கின்றனர். நாற்பது ஆண்டுகள் திருமணம் செய்த நாட்டிலிருந்து விவாகரத்து எப்படி கேட்பது? இது எப்படியெனில், மிகவும் செல்வம் மிக்க ஒருவனிடம் விரும்பியதெல்லாம் இருந்தும், அன்பு இல்லாத நிலை தான்.'' இதிலிருந்து அவரின் உள்ளம் எங்கிருந்ததெனத் தெளிவாகிறது.

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக எமது செபத்திலும், திருப்பலியிலும் வேண்டிக் கொள்வோம்.

## காவலன் சந்தா

உங்கள் வருடாந்த சந்தாவை உடனடியாகப் புதுப்பியுங்கள்.

(ஆ-ர்)

## அருங்கொடை....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடிகளார் பேசுகையில் "குழுக்களாகச் சேர்ந்து செபிப்பதானாலும், வாழ்வதனாலும், இறைவார்த்தையைப் பகிர்வதனாலும் பரிசுத்த ஆவியின் கொடைகள், கனிகளை அதிகம் அநுபவிக்கமுடியும் என்றும், இவ்வித அனுபவங்களைப் பெறும் போது ஏனையவர்களைவிட நாம் எவ்விதத்திலும் உயர்ந்தவர்களோ, வேறுபட்டவர்களோ என்று எண்ணி மேட்டிமை கொள்ளாது கிறிஸ்துவின் மறை உடலாம் திருச்சபையைக் கட்டியெழுப்பும் பணியில் நம் கவனத்தை வைத்திருக்க வேண்டும்'' என்று கூறினார்.

அவரைத் தொடர்ந்து திரு. ஸ்ரீபன் உரையாற்றினார். கிறிஸ்துவ வாழ்வில் புதுப்பிக்கப்பட்டிருப்பதோடு மாற்றமடைந்திருக்கிறோம் என்ற உணர்வுள்ளவர்களாய் நாம் இருக்கவேண்டுமே யொழிய உணர்ச்சிவசப் படுபவர்களாய் வாழக் கூடாது என்று அறிவுரை பகர்ந்தார்.

அருட்தந்தை P. இருதயதாஸ் தன் உரையில் செபவாழ்வோடு சேவை வாழ்வு இணைந்திருக்க வேண்டுமென்ற கருத்தை ஆழப்படுத்தினார். பரலோக தந்தையின் அன்பை அனுபவிக்கும் நாம் பிறரிடம் அன்பை எதிர்பார்க்காமல் சேவைசெய்ய அழைக்கப்பட்டுள்ளோம் என்று கூறி, அருங்கொடையினரின் அழைப்பின் கனாகனத்தை ஞாபகப்படுத்தினார்.

திருப்பலிக்குப்பின் ஆண்டறிக்கை திரு. சே. அன்ரனி அவர்களால் வாசிக்கப்பட்டது

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1993 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. இல. QB/1001/58/81